දීවර අමාත්‍යාංශය - கடற்றொழில் அமைச்சு - Ministry of Fisheries

ශ්‍රී ලංකා ජාතික ජලජීවී වගා සංවර්ධන අධිකාරිය
இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை
National Aquaculture Development Authority of Sri Lanka

මගේ අංකය / எனது இல. / My No.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date

2024.01.22

கொளரவ மீன்படி அமைச்சர்

மீன்பிடி அமைச்சு
மாலிகாவத்தை
கொழும்பு 10.

ஐயா!

வருடாந்த அறிக்கை 2021

1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், 2021 ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2021 டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கையினை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.
தலைவர்

- தலைவரின் மீளாய்வு
- பணிப்பாளர் சபையின் அறிக்கை
- கணக்காய்வாளரின் அறிக்கை
- வருடாந்த கணக்கு கொண்ட ஐந்தொகை

இப்படிக்கு நம்பிக்கையுள்ள,

பீ. விஜேரத்ன
தலைவர்

41/1, නව පාර්ලිමේන්තු පාර, පැලවත්ත, බත්තරමුල්ල. இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல. 41/1, New Parliament Road, Pelawatte, Battaramulla.

பொது தொலைபேசி / General Nos. 011 2786495, 2786577
Fax - 011 2786493
Web - www.naqda.gov.lk

தலைவர் / Chairman 011 2786497
Fax - 011 2786497
E-mail - chairman@naqda.gov.lk

பணிப்பாளர் நாயகம் / Director General 011 2786498
Fax - 011 2786640
E-mail - dg@naqda.gov.lk

வருடாந்த அறிக்கை

2021

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

41/1, புதிய பாராளுமன்ற வீதி,

பலவத்தை,

பத்தரமுல்ல

தொலைபேசி இலக்கம்: 011 2786495

பக்ஸ் இலக்கம் : 011 2786493

www.naqda.gov.lk

உள்ளடக்கம்

1	தபானத் தகவல்கள்	61
2	தலைவரின் மீளாய்வு	64
3	நிலையான அபிவிருத்தியிற்கு ஒப்பீடாக இருத்தல்	80
4	பணிப்பாளர் சபையின் அறிக்கை	82

தாபனத் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

நோக்கு

நீரியல் வாழ் செய்கை மற்றும் நன்னீர் மீன்பிடி கைத்தொழிலின் நீடித்த நிலையான அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தின் மூலம் மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் முன்னனி நிறுவனமாக செயற்படல்.

பணிக்கூற்று

சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவு நீரியல் வாழ் தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் தொடர்ச்சியாக நீரியல் வள முகாமைத்துவ செயற்பாடுகள் மூலம் நன்னீர் மற்றும் உவர் நீர் மீன் வகைகளை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளை வழங்குவதன் மூலம் கிராமிய சமூகத்தில் வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக பொருளாதார தரத்தினை விருத்தி செய்வதற்கு பங்களிப்பு வழங்குதல்.

பணிப்பாளர் சபை

1.	திரு பீ. விஜேரத்ன	-	தலைவர்
2.	திரு பீ.பீ.எல்.யு. பாலசூரிய	-	பணிப்பாளர்
3.	திரு கணேஷ் ராஜ்குமார்	-	பணிப்பாளர்
4.	திரு. டி.வீ. உபுல்	-	பணிப்பாளர்
5.	பேராசிரியர் எம்.ஜே.எஸ். விஜேரத்ன	-	பணிப்பாளர்
6.	திரு எஸ்.ஜே. கஹவத்தை	-	பணிப்பாளர்
7.	திருமதி பீ.எச்.இ ஹதுன்ஹேவா	-	பணிப்பாளர்
8.	திருமதி ஆர்.எச்.எம்.பீ. அபேகோன்	-	பணிப்பாளர்
9.	திரு ரீ.ஏ.டி. தம்மிக பிரேமரத்ன	-	பணிப்பாளர்
10.	திருமதி சந்திகா அதுகல	-	பணிப்பாளர்

பிரதான அலுவலகம்

41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலத்வத்தை, பத்தரமுல்ல.

கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் திணைக்களம்

வங்கியாளர்

மக்கள் வங்கி, பத்தரமுல்ல

இலங்கை வங்கி, பலவத்தை.

தலைவரின் மீளாய்வு

2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை தேசிய நீரியில் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையினை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

அறிமுகம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 2021 ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமான 12 மாத கால எல்லைக்குள் கடந்த

ஆண்டுகளைப் போன்று செயற்சாதனையில் முன்னேற்றங்களை காண்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நன்னீர் மீன் உற்பத்தி

அட்டவண 1 – கடந்த ஆண்டுகளில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்தி

ஆண்டு	நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி (மெ.தொ)	கரையோர நீரியல் வாழ் செய்கை மூலம் இறால் உற்பத்தி(மெ.தொ)	மொத்த உற்பத்தி (மெ.தொ)	கடந்த ஆண்டை விட உற்பத்தி அதிகரிப்பு விகிதாசாரமாக (%)
2014	70,600	5,150	75,750	13
2015	60,210	7,090	67,300	-11.2
2016	67,900	6,030	73,930	10
2017	76,953	5,587	82,540	12
2018	73,910	14,100	88,010	7
2019	77,340	13,240	90,580	3
2020	89,520	12,700	102,220	13
2021	85,560	18,890	104,450	2

மூலம் : நக்டா, திட்டமிடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை அலகு

2021 ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்தி 104,450 மெற்றிக் தொன் என்பதுடன், இவ் அளவு 2020 ஆம் ஆண்டை விட 2,230 மெற்றிக் தொன் ஆகும். 2020 ஆம் ஆண்டிற்கு இணைவாக நன்னீர் இறால் உற்பத்தி 96% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், அது கரையோர நீரியல் வாழ் செய்கை உற்பத்தியின் 49% அதிகரிப்ப உறதிப்படுத்தப்ப்ட்டது. கொவிட் 19 காலப் பகுதியில் மீன்பிடித்துறை அத்தியவசிய சேவைப் பிரிவாக பிரகடணப்படுத்தப்பட்டது. இதனால் அக் காலத்திற்குள் நீர்நிலைகளில் மீன்பிடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டுகளில் நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்நிய நாட்டு செலாவனி உழைப்பு மற்றும் கிராமிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு

2021 ஆம் ஆண்டில் நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தியின் பெறுமதி ரூபா 51 பில்லியன் மாத்திரம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் செய்கை மேற்கொள்ளப்பட்ட இறால் ஏற்றுமதிகள் மூலம் ரூபா 8,462 மில்லியன் அந்நியநாட்டு செலாவனி ஈட்டப்பட்டுள்ளதுடன் இது 2020 ஆண்டில் ரூபா 3,235 மில்லியனுடன் ஒப்பீடு செய்யப்படும் போது அது 162% அதிகரிப்பாக பதிவாகியுள்ளது. அலங்கார மீன் ஏற்றுமதிகள் மூலம் ரூபா 4,193 மில்லியன் அந்நியநாட்டு செலாவனி உழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது 2020 ஆம் ஆண்டில் ரூபா 2,409 மில்லியனுடன் ஒப்பீடு செய்த 74% அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது. *(மூலம்: றறற.களைாநசனைள.பழஎ.டம மற்றும் நக்டா, திட்டமிடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை அலகு)*

நன்னீர் மின்படி மற்றும் நீரியல் வாழ் செய்கைப் பிரிவிற்கு கொவிட் 19 காரணமாக தாக்கம்

கொவிட்ட 19 காலப் பகுதியில் மீன்பிடித்துறையினை அத்தியவசிய சேவையாக பிரகடணப்படுத்த நமவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே நன்னீர் நீர் நிலைகளில் மீன்பிடி செயற்பாடுகள் இக் காலம் பூராகவும் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் மீனவர்களுக்கு மீன்பிடி செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் மீனவர்கள் மீன்பிடி செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவடைந்தமையினால் உற்பத்தியும் குறைவடைந்தது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக அலங்கார மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் ஏனைய நீரியல் வாழ் செய்கை கைத்தொழில்களின் செயற்பாடுகள் ஓரளவு பின்னடைந்தன. விஷேடமாக ஊரடங்குச் சட்டம் காரணமாக கைத்தொழிலுக்கு தேவையான வழங்கள்கள் வசதிகளை முகாமைத்துவத்திற்காக மக்களின் போக்குவரத்து செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் மீன் இனப்பெருக்க மத்திய நிலையங்களில் போதியளவு பணியாளர் சபையுடன் உரியவாறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீன் குஞ்சுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

2021 ஆண்டில் உடவளவ, தபுலை, இகினியாகல, கலவெவ, இரணமடுவ, பெலன்னறுவை, நுவரெலிய மற்றும் முறுதுவெல நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன் விரலிகளின் எண்ணிக்கை 239.76 மில்லியன் ஆகும். இது 2020 ஆம் ஆண்டிற்கு இணைவாக 29% வளர்சியாகும். இக் விரளிகளின் கூடுதலான அளவினை மீன் குஞ்சுகள் வரை விருத்தி செய்வதற்காக தனியார் வாவிகள், கூடுகள், அணைகள் மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களினால் முகாமைத்துவப்படுத்தும் மீன் அதிகரிப்பு அளவு மீன் குடம்பி உற்பத்தி அலகிற்காக வெளியிடப்பட்டுள்ளது. 2016 தொடக்கம் 2021 மீன் குஞ்சுகள் உற்பத்தி மற்றும் விநியோகம் அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2 – சினை உற்பத்தி மற்றும் விநியோகம் (மில்லியன்)

உற்பத்தி அலகு	2016	2017	2018	2019	2020	2021
சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	15.76	19.13	26.35	20.43	14.60	31.05
நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மீன் விரளிகள் உற்பத்திக்காக	57.64	60.82	79.02	57.85	100.03	113.11
தனியார் வாவி உரிமையாளர்களுக்காக	8.53	6.63	16.89	23.73	23.40	36.59
கூடுகள் / அணைகளுக்காக	30.34	47.20	60.26	42.31	47.60	59.01
சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	**112.27**	**133.78**	**182.52**	**144.32**	**185.63**	**239.76**

மூலம் : நக்டா, திட்டமிடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை அலகு

மீன் விரளிகள் உற்பத்தி

2021 ஆம் ஆண்டுக்குள் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம். சமூகம் சார் மீன் உற்பத்தி அலகு, கூடுகள், அணைகள் மற்றும் தனியார் வாவிகளில் 111.58 மில்லியன் விரளிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இவ் ஆண்டில் விரளிகளின் உற்பத்தி 16% அதிகரித்துள்ளது. மேற்கூறப்பட்ட மீன் விரளிகள் உற்பத்தியில் 38% நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் எஞ்சியது நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் எஞ்சிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் வெளியடப்பட்ட மீன் குஞ்சுகள் தனியார் வாவி, கூடு, அணை மற்றும் கமூகம் சார் அமைப்பினால் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும் மீன் குடும்பி உற்பத்தி அலகில் விருத்தி செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 2016 –

2021 கால எல்லைக்குள் பல்வேறுபட்ட உற்பத்தி அலகுகளில் முழுமையாக மீன் குடம்பி உற்பத்தி அட்டவணை 3 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3 – மீன் விரளிகள் உற்பத்தி (மில்லியன்)

உற்பத்தி அலகு	2016	2017	2018	2019	2020	2021
சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	10.30	13.38	16.74	15.03	12.07	17.23
நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மீன் விரளிகள் உற்பத்திக்காக	-	-	0.46	0.04	0.42	0.22
தனியார் வாவி உரிமையாளர்களுக்காக	37.29	38.07	48.20	29.17	36.40	42.14
கூடுகள் / அணைகளுக்காக	4.07	3.31	7.44	14.26	15.14	26.75
சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	18.11	28.16	38.79	30.09	31.91	25.24
சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	**69.77**	**82.92**	**111.63**	**88.59**	**95.94**	**111.58**

மூலம் : நக்டா, திட்டமிடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை அலகு

மீன் விரளிகள் விநியோகம்

நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், தனியார் வாவி, சமூகம் சார் சிறியளவு மீன் குடம்பி உற்பத்தி அலகுகள், கூடுகள் மற்றும் அணைகள் மூலம் 2021 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் விரளிகள் நீர் நிலைகளில் இடுவது தொடர்பிலான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டிற்குள் கூடுதலான மீன் விரளிகள் அளவினை இடுவதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தியினை அதிகரிக்க உதவியாக அமையும் என்பது குறிப்பிடபத்தக்கது.

அட்டவணை 4 – மீன் விரளிகளை இடல் - 2021 ஏ

நீர் நிலைகளின்	நீர் நிலைகளின்	மீன் விரளிகளை

வகைகள்	எண்ணிக்கை	இடல் (மில்லியன்)
பாரியளவு நீர் நிலைகள்	41	28.62
நடுத்தரளவு நீர் நிலைகள்	80	29.91
சிறியளவு நீர் நிலைகள்	320	34.29
பருவகால நீர் நிலைகள்	735	13.23
வாவிகள்	259	2.37
கங்கைகள் மற்றும் ஏறிகள்	-	2.43
மொத்தம்	**1435**	**110.85**

மூலம் : நக்டா, திட்டமிடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை அலகு

தற்போது காணப்படும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் இனப்பெருக்க வசதிகள், மீன் குடம்பி விருத்தி செய்யும் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், நன்னீர் மீன் குடம்பி உடற்பத்தியினை விருத்தி செய்தவற்கு உதவியாக அமைகின்றது. ஏற்கனவே அநேகமான சிறிய அளவு மீன் குடம்பி உற்பத்தி அலகுகள், நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் மீன் குடம்பிகளை விரளிகள் வரை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைக்குரிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்கள் மூலம் மாத்திரம் மீன் குடம்பிக்காக காணப்படும் கோள்வியினை நிவர்த்தி செய்வது சிரமம் என்பதனால் தோந்தெடுக்கப்பட்ட சிறியளவு மீன் குடம்பி உற்பத்தி செய்யும் 10 அலகுகளில் மீன் சினைக்கு அடுத்த பருவம் தொடக்கம் விரளிகள் வரை விருத்தி செய்வதற்காக உரிய அலகுகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 10 அலகுகளை நிர்மாணிக்கும் செயற்பாடுகளுக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதுடன் 06 அலகுகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 04 அலகுகளை அபிவிருத்தி செய்யும் பணிகளில் 90% பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நீர் நிலைகளில் இடுவதற்கு தேவையான மீன் விரளிகளின் விநியோகத்தினை மேம்படுத்துவதற்காக மீன் இனப்பெருக்க தொழில்நுட்பத்தின் மீனவ சமூகத்திற்கு அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடாந்தம் தேவைப்படும் மீன்

விரளிகளை தொடாச்சியாக நிலையான அடிப்படையில் வழங்குவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது. பொருத்தமான 03 இடங்கள் (எக்கல்ஓயா, அம்பாரை / பரைபஞ்சா, திருகோணமலை / புதுமுறிப்பு, கிளிநொச்சி) தோந்தெடுக்கப்பட்டுள்ள நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தபுலை மீன் மரபணு அபிவிருத்தி அலகினை தாபித்தல்.

தபுலை மீன் மரபணு அபிவிருத்தி அலகின் நிர்மாணிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கூடுதலான பண்புசார் தரம்மிக்க நிலமைகளை கொண்ட தாய் மீன் உற்பத்தி, மீன் சினைகளின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்தல், நன்னீர் நீரியல் வாழ் செய்கைக்காக லூலா (*Ophiocephalus striatus*), வல்லாய (*Walago attu*) போன்ற உள்நாட்டு விஷேட வகைகளின் புதிய மீன் வகைகளை உற்பத்தி செய்வது அடிப்படை நோக்கமாகும். இப்புதிய மீன் வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நன்னீர் நீரியல் வாழ் செய்கை மிகுந்த பல்வகைத் தன்மையானதாக மாற்றம் பெறுகின்றது. எனவே இலங்கையில் நிலையான நன்னீர் மீன் உற்பத்தியினை உறுதிப்படுத்துவதற்காக மீன் மரபனு அபிவிருத்தி மத்திய நிலையத்தினை தாபிப்பது மிக முக்கியமாகும்.

உள்நாட்டு உணவிற்காக பொருத்தமான மீன் மற்றும் அலங்கார மீன் தாய் மீனாக சேர்த்து இனப்பெருக்கம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டன.

- *Labeo lankae* (அழிவடைந்து செல்லும் அச்சுறுத்தலிற்கு உட்பட்டுள்ள) (தபலயா/ Red fin labeo) இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.
- *Systomus sarana* (Olive barb/ ஒலிவ் பார்ப்) விருத்தி செய்து இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.
- *Channa ara* (Giant snakehead/ கங் ஆரா) தாய் மீன் சேர்க்கப்பட்டது.
- *Anabas testudineus* (Claimbing perch/ **காவையா**) இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.
- *Channa striata* (Striped snakehead /லூலா) இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.
- *Heteropneustes fossilis* (Stinging catfish/ **ஹாங்கா**) இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.
- *Ompok cylonensis* (Butter catfish/ **வலபொத்தா**) இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.

- *Garra ceylonesis* (NT) (Stone saucer / **கல்பாதி**) இனப்பெருக்கம் வெற்றியளித்துள்ளது.
- உள்நாட்டு உணவிற்காக மீன் விஷேடங்களுக்காக விருத்தி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நன்னீர் இறாலுக்குப் பின்னர் சினை உற்பத்தி

பம்பல் மற்றும் கஹந்தமோதர ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள இனப்பெருக்க மற்றும் தனியார் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் மூலம் 2021 ஆம் ஆண்டுக்குள் நன்னீர் இறாலுக்குப் பின்னர் 52.16 சினைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் உரிய ஆண்டுக்குள் இடப்பட்ட அளவு கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிபடப்பட்டுள்ளது. கொவிட் 19 நிலமைகள் காரணமாக மீன் வகைகளை பெருக்குவதற்காக நீர் நிலைகளில் மீன் குஞ்சுகளை சேர்ப்பதில் சிரமங்களை எதிர்கொள்ளப்பட்டமையினால் விஷேடமாக நன்னீர் இறால் இனப்பெருக்க நிலயங்களில் இனப்பெருக்க செயற்பாடுகள் குறைவடைந்துள்ளதுடன், நன்னீர் இறால் குஞ்சு உற்பத்தி 2020 ஆம் ஆண்டிற்கு இணைவாக 33மூ இனால் குறைவடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் நீர்நிலைகளுக்கு அமைய நன்னீர் இறால் குஞ்சுகள் இடப்பட்ட அளவு அட்டவணை 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 5 – நன்னீர் இறாலுக்கு பின்னர் சினைகளை இடல் - 2021

நீர் நிலைகளின் வகை	நீர் நிலைகளின் எண்ணிக்கை	இடப்பட்ட பின்னரான சினைகள் (மில்லியன்)
பாரியளவு நீர்த்தேக்கங்கள்	33	15.40
நடுத்தரளவு நீர்தேக்கங்கள்	59	17.13
சிறியளவு நீர்த்தேக்கங்கள்	142	17.16
பருவகலா நீர் நிலைகள்	4	0.21
வாவிகள்	7	0.08
ஏறிகள்	9	2.18
மொத்தம்	**254**	**52.16**

மூலம் : நக்டா, திட்டமிடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை அலகு

தற்போது நான்கு நிறுவனங்களினால் நன்னீர் இறால் ஏற்றுமதி செய்வதுடன் 2021 ஆம் ஆண்டில் 1040 மெட்ரிக் தொன் அறுவடை பெறப்பட்டுள்ளதுடன் 123 மெட்ரிக்

தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நன்னீர் இறால் கூடுதலான பெறுமதி கொண்ட விஷேடமானது என்பதனால் மீனவர்களின் வருமானம் அதிகரிக்கும். நன்னீர் இறால் நீர் நிலைகளில் இடுவதற்காக முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் பிரதிலாபம், மீன் விரளிகளை இடுவதற்கு இணைவாக அதிகரிக்கும்.

இலவச மீன் / இறால் குஞ்சுகளை இடும் வேலைத்திட்டம்.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் மீன் குடம்பிகள் 45.66 மில்லியன், மீன் விரளிகள் 61.52 மில்லியன், நன்னீர் இறாலுக்குப் பின்னர் சினைகள் 28.42 மில்லியன் மற்றும் உவர் நீர் இறாலுக்குப் பின்னர் 49 மில்லியன் சினைகள் 2021 ஆம் ஆண்டில் நீர் நிலைகளில் இலவசமாக இடப்பட்டது.

நீர் நிலைகளில் மீன்பிடி முகாமைத்துவ செயற்பாடுகள்

சட்டவிரோதம் அல்லாத மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்துவனை தடுத்து நீர் நிலைகளில் நன்னீர் மீன்பிடி செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவதற்காக அதிகார சபையினால் வ/ப இரக்னா லங்கா பாதுகாப்புக் கம்பினியுடன் இணைந்து சுற்றிவளைப்பு அலகு தாபிக்கபப்படடதுடன் இதற்கு மேலதிகமாக அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை நடாத்துதல், தற்போது காணப்படும் கிராமிய மீன்பிடி அமைப்புக்களை பலப்படுத்தும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் நன்னீர் மீன்பிடி கைத்தொழிலுக்காக 312 மீனவ வலைக் கூட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது பயன்படுத்தக் கூடிய நன்னீர் மீன்பிடி படகுகளின் எண்ணிக்கை 9,940 ஆகும்.

இறால் செய்கை கைத்தொழில்

இறால் செய்கை இலங்கையில் மிகவும் பயன்மிக்க வர்த்தக நீரியல் வாழ் செய்கை என்பதுடன் அதிகார சபையின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகள் காரணமாக இன்று இறால் கைத்தொழில் பயன்மிக்க மட்டத்தினை எட்டியுள்ளது. இறால் உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக நீர் சுத்திகரிப்பு முறைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் உயிரியல் பாதுகாப்பினை மேம்படுத்துவதன் மூலம் இறால் செய்கை செயற்பாடுகளை தீவிரப்படுத்தல், ஒல்லாந்தர் குளத்தினை தோண்டுதல், புத்தளம் மாவட்டத்தில் இறால் விவசாயப் பண்ணைகளுக்காக பொது மின்சாரத்தினை வழங்குவதற்கு அதிகார சபையினால் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பிரதேசத்தில் இறால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு முடிகின்றது. 2021 ஆம் ஆண்டில் கூடுதலான இறால் உற்பத்தியான 14,415 மெட்ரிக் தொன் பெறப்பட்டதுடன் இது 2020 ஆம் ஆண்டிற்கு இணைவாக

143% வீத அதிகரிப்பாகும். இறால் ஏற்றுமதியின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 8,462 மில்லியன் ரூபாவாகும்.

நீரியல் வாழ் செய்கை முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்கள் 342 வழங்கப்பட்டதுடன் இதில் 310 இறால் விவசாயப் பண்ணைகளுக்காவும், 32 இறால் இனப்பெருக்கத்திற்காகவும், வழங்கப்பட்டன. அதிகார சபையினால் 2021 ஆம் ஆண்டில் இறாலுருக்குப் பின்னரான சினைகள் மற்றும் தாய் மீன்களின் நோயிற்காக PCR 3096 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இப் பரிசோதனைகள் பத்துலுஓயாவில் தாபிக்கப்பட்டுள்ள மீன் நோயினை நிர்ணயித்தல் மற்றும் சுகாதார முகாமைத்துவ விஞ்ஞான ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இப் பரிசோதனை, விவசாயப் பண்ணைகளில் இடுவதற்காக ஆரோக்கியம் மிக்க சினைகளின் இனப்பெருக்கத்திற்கு உதவியாக அமைகின்றது. மேலும் சினைகளின் பின்னர் பண்புசார் தரத்தினை மேம்படுத்துவதற்காக , அனைத்து இறால் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் Monodon Bacula வைரஸ் மற்றும் வெள்ளைப் புள்ளி நோயிற்கான பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலம் பாதிப்பு மிக்க நீரியல் மீன் சுகாதார மற்றும் சுற்றாடல் ஆய்வுகூடத்தின் உத்தியோகத்தர்களினால் மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

2021 ஆம் ஆண்டில் புத்தளம், மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இறால் இனப்பெருக்க 49 நிலையங்கள் மற்றும் 898 விவசாயப் பண்ணைகள் செயற்பட்டன. உரிய ஆண்டுக்குள் *Peneaus monodon* பின்னரான சினை உற்பத்தி 192 மில்லியன் மற்றும் *Litopeneaus vannamei* பின்னரான சினை உற்பத்தி 544.2 மில்லியன் ஆகும்.

அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை

நக்டா நிறுவனத்தினால் அவர்களின் புதிய வகையினை உருவாக்குதல், தொழில்நுட்ப அபிவிருத்தி, தாய் மீன் வழங்கள், மீன் நோய் நிர்ணயம், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் போன்றவைகள் மூலம் அலங்கார மீன் நோய் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கையைப் போன்று ஏற்றுமதிக்காக உதவிகள் வழங்கப்படுகின்றன. நம்பொடகல்ல, கிணிகத்ஹேன மற்றும் செவனபிடிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை அபிவிருத்தியிற்கு உரியதான பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மரபணு பல்வகைத் தன்மையினை ஊக்குவிப்பதற்காக நம்பொடகல்ல மத்திய நிலையத்தில் கப்பி வகை மற்றும் கிணிகத்ஹேன மத்திய நிலையத்தில் சுவொட் டேல் வகைகளின் மரபனு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அலங்கார மீன் செடி திசு நடுகைக்காக நம்பொடகல்ல மத்திய நிலையத்தில் திசு

நடுகை விஞ்ஞான ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கமாக அமைவது தொழில்நுட்ப மற்றும் நீரியல் வாழ் செடி ஏற்றுமதியின் மூலம் அந்நியநாட்டு செலாவனியை உழைப்பதாகும். 2021 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட நீரியல் வாழ் செடி எண்ணிக்கை 46,232 ஆகும்.

இம் மத்திய நிலையத்தின் மூலம் அலங்கார மீன் 6.45 மில்லியன் விவசாயிகளுக்கு மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 35,070 தாய் மீன் வகைகள் இவ் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. நன்னீர் அலங்கார மீன் மிகுந்த அழகான நிறம் கொண்ட மற்றும் சிறந்த தோற்றத்துடன் காணக்கூடிய கப்பி, சுவேட்டேல், பிலேட், பார்ப்ஸ், டெட்ரா, ஏன்ஜல், குரம் மற்றும் கட்பிஸ் விஷேட வகைகளைக் கொண்டதாகும். இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட இந் நன்னீர் விஷேட வகைகளில் 50-60% மாத்திரம் கப்பி வகைகளைக் கொண்டதாகும். இலங்கையின் நிரந்த ஏற்றுமதிக் கம்பனிகள் 45 மாத்தரம் காணப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் நன்னீர் மீனிற்கான பிரதான கொள்ளவனவாளர்களான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜர்மன், சீனா, அவுஸ்திரேலியா, போலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இராச்சியம், இதாலி ஆகும். உரிய ஆண்டிற்குள் அலங்கார மீன் செய்கை துறையில் 1112 பேர் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். கொவிட் 19 காரணமாக திட்டமிடப்பட்டவாறு பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை.

உவர் நீர் அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையம், புத்தளம், பங்கதெனிய

தற்போது இலங்கையில் உவர் நீர் அலங்கார மீன் ஏற்றுமதி செய்யப்படுவது கடலிலிருந்து கூடுதலாக மீன்களைப் பிடித்தல், மீன் கூடுதலான இருக்கக்கூடிய இடங்களை அழித்தல், பவளப் பாறைகளை அழித்தல், கடலில் சேற்று மண் தேங்கி இருத்தல், கடலை மாசடையச் செய்தல் போன்ற பல்வேறுபட்ட சுற்றாடல் காரணங்களுக்கமைய உவர் நீர் அலங்கார மீன் வளர்ச்சி குறைவடைந்து செல்வதுடன் இம்மீன்களை பாதுகாப்பதற்காக எதிர்வரும் காலங்களில் உவர் நீர் அலங்கார மீன் பிடிப்பதை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் உவர் நீர் அலங்கார மீன் ஏற்றுமதிக்கு தாக்கம் செலுத்தியுள்ளது. இதனால் செயற்கை இனப்பெருக்கத்தை மேற்கொண்டு ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படுகின்றது. உவர் நீர் அலங்கார மீனுடன் ஒப்பீடு செய்யும் போது உவர் நீர் அலங்கார மீன்களுக்காக கூடுதலான விலைகள் காணப்படுவதுடன் வெளிநாட்டு சந்தையிலும் கூடுதலான கேள்விகளும் காணப்படுகின்றன

அலங்கார மீன் உற்பத்தி பரம்பலை அதிகரித்தல், அலங்கார மீன் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், தொழில்நுட்ப அறிவினை வழங்கும் நோக்குடன் புத்தளம் பங்கதெனியவில் உவர் நீர் அலங்கார மீன்

இனப்பெருக்க மத்திய நிலையத்தை நிர்மானிப்பதற்காக அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சம்பிரதாயமல்லாத நீரியல் வாழ் செடிச் செய்கைகள்

- **கடல் அட்டை இனப்பெருக்கம் மற்றும் செய்கை**

கடல் அட்டை இனப்பெருக்க நிலையம்

கடல் அட்டைகள் செய்கையினை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தற்காக மன்னார் ஓலைத்துடுவாய் பிரதேசத்தில் கடல் அட்டைகள் இனப்பெருக்க மத்திய நிலையம் 2021 மார்ச் மாதம் 30 ஆம் திகதி அதன் செயற்பாடுகளை அரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் இனப்பெருக்க ஆய்வுகூடம் செயற்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் 216,000 குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தனியார் துறையினால் மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடல் அட்டை செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் கடல் அட்டைகள் 580 மெட்ரிக் தொன் (ஈரலிப்பு நிறை) அறுவடை பெறப்பட்டுள்ளது. கடல் அட்டை ஏற்றுமதியினை மேம்படுத்துவதற்காக களிநொச்சியில் வலைபாடு பிரதேசத்தில் கடல் அட்டை கிராமம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடல் அட்டை செய்கைக்காக 1900 ஏக்கர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- **கடல் வாழ் செடி செய்கை**

வடக்கு மற்றும் வடமேல் மாகாண கடற்பரப்பில் செடி செய்கை சமூகத்தின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் கடல் வாழ் செடி செய்கை உற்பத்தி 218 மெட்ரிக் தொன் (ஈரரலிப்பு நிறை) ஆகும். மொத்த செய்கையின் பரப்பளவு சுமார் 100 ஹெக்டயராகும்.

.

- **மோதா மீன் இனப்பெருக்க மற்றும் செய்கை**

மட்டக்களப்பு, பல்தேவை விஷேட கடல் துடுப்புக்கள் இனப்பொருக்க செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் மோதா மீன் விரளிகள் 64,900 உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது இலங்கையில் மோதா மீன் செய்கையினை பரவலாக்குவதற்காக வழிவகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

.

நீர் கொழும்பு ஏரி, மன்னார், புத்தளம், கிளிநொச்சி, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மோதா மீன் செய்கைக்காக தனியார் துறையினர் கவனம் செலுத்தியுள்ளனர். ஏற்கனவே சுமார் 350 செய்கையாளர்கள் வாவிகள் மற்றும் கூடுகளில் மோதா மீன் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டில் 1.16 மில்லியன் மோதா குஞ்சுகள் இடப்பட்டுள்ளதுடன், 466 மெ.தொன் மோதா அறுவடையும் பெறப்பட்டுள்ளது.

பாரிய கூடுகளில் மோதா மீன் செய்கை செயற்திட்டம் தனியார் கம்பனியினால் திருகோணமலை கடல பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தக மட்டத்தில் கடல் சார்ந்த மீன் செய்கையினை நாட்டிற்கு அறிமுகப்படுத்தல் இதன் மூலம் இடம்பெறுகின்றது. மேலும் இச் செயற்திட்டத்தின் மூலம் நேரடி தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதன் ஊடாக கரையோர மக்களின் வாழ்வாதாரத்தை உருவாக்குதல், இயற்கை மீன் வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை கட்டுப்படுத்தல், தொடர்ச்சியாக மீன் உற்பத்தி ஏற்றுமதி சந்தைக்கு வழங்குவதன் மூலம் அந்நிய நாட்டுச் செலவாணியினை அதிகரித்தல், சுற்றுலா பிரயாணிகளின் கவர்ச்சியைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் 406 மெ.தொன் மோதா அறுவடையும் பெறப்பட்டுள்ளது.

- **வெக்காய மீன் இனப்பெருக்க மற்றும் செய்கை**

டூனா மீன் இனங்களுக்காக தேவையான மீன் இரையை இறக்குமதி செய்வதற்காக இலங்கை வருடாந்தம் 250 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதி செலவிடப்படுகின்றது. இந் நிலைமையின் கீழ் டூனா மீன்களுக்காக தேவையான மீன் இரையினை தொடர்ந்தும் வழங்குவதற்காக வேக்கயா மீன் செய்கையினை விருத்தி செய்வது அத்தியாவசியமாகும். கடந்த காலங்களில் இது தொடர்பில் வெற்றிகரமாக பரிச்சாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. வேக்காய மீன்கள் டூனா கைத்தொழிலின் இரைக்காகப் பொருத்தமான ஒரு வகையான மீன் வகை என்பதுடன் கடந்த காலங்களில் வெற்றிகரமாக பரிட்சாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் வேக்காய மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் இல்லை என்பதுடன் இதனால் வேக்கயா மீன் இனப்பெருக்க மத்திய நிலையத்தை தாபிப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புத்தளம் மாவட்டத்தின் பங்கதெனிய பிரதேசத்தில் வேக்கயா மீன் இனப்பெருக்க நிலையத்தைத் தாபிப்பதற்காக எமது அதிகார சபையினால் நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன. நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இறைக்காக வெக்காய மீன் செய்கை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் 5.1 மெற்றிக் தொன் அறுவடை பெற்றுக் கொள்ளப்பட்டது.

- **நண்டு இனப்பெருக்கம் மற்றும் செய்கை**

2021 ஆம் ஆண்டில் 50இ900 நண்டு குஞ்சுகள் தனியார் இனப்பொருக்க மத்திய நிலையம் (இன்டிகோ அக்வா ஹுவரி) உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் குளங்களில் இருந்து 6.4 மெட்ரிக் தொன் நண்டு அறுவடை பெறப்பட்டுள்ளது.

அரச தனியர் பங்குடமையின் கீழ் கரையோர நீரியல் வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி..

றகவ நீரியல் வாழ் செய்கை பண்ணை, ஹம்பாந்தோட்டை

கரையோர நீரியல் வாழ் செய்கைக்காக பாரிய இயலுமைகள் தென்மாகாணத்தில் காணப்பட்ட போதிலும் அம் மாகாணத்தில் தொழில்முயற்சியாளர்கள் கரையோர நீரியல் வாழ் செய்கை தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. எனவே நண்டு செய்கை செயற்திட்டம் மாதிரி செய்கை செயற்திட்டமாக தென்மாகாணத்தில் முதலீட்டாளர்கள் நீரியல் வாழ் செய்கைக்கு ஈடுபடுத்தும் அடிப்படை நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது இதற்கான கற்கை ஆய்வு செயற்பாடுகள் மற்றும் அடிப்படை சுற்றாடல் மதிப்பீடுகளை மேற்கொண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ப்பட்டுள்ளது. கற்கை ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் வேளையில் றகவ ஏறியில் உவர் தன்மை 15 ீவ – 25 ீவ இடைப்பட்டதாகும். இருப்பினும் இலங்கையில் காலநிலை மாற்றங்களுக்கு அமைய 2018 – 2019 ஆண்டுக்குள் ஏறியின் உவர் தன்மை 10 ீவ வரை குறைவடைந்துள்ளது. உவர் தன்மை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையினால் சேற்று நண்டு செய்கை மேற்கொள்ள முடியாத நிலமை உருவாகியுள்ளது. எனவே குறைவான உவர் தன்மையில் செயற்படுத்த முடியுமான மற்றும் உயரிய மட்டத்தில் அந்நியநாட்டு செலாவணி ஈட்டப்பட்டுள்ள வர்த்தகமய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சூழலிற்கு உகந்த உவர் நீர் இறால் செய்கையினை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இவ் இறால் செய்கை செயற்திட்டம் அரச – தனியார் பங்குடமையின் கீழ் அமுல்படுத்தவதற்கு தீமானிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயப் பண்ணைகளை அமுல்படுத்துவதற்கு மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவதற்கு ஆர்வம் காண்பிக்கும் தரப்பினர்களை பத்திரிகை விளம்பரம் மூலம் அப்பிராயங்கள் கோரப்பட்டன. இதற்கு அமைய அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளின் பின்னர் 30 ஆண்டு காலத்திற்கு வுயிசழடியநெ குசழணநெ குழழன (எவ) டுவன இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கட்டம் ஐ இன் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இறால் உற்பத்தி 198 மெட்ரிக் தொன் மற்றும் கட்டம் ஐஐ இன் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இறால் உற்பத்தி 550 மெட்ரிக் தொன் ஆகும். இதற்கு அமைய முதலாவது ஆண்டுக்குள் ரூபா 178..32 மில்லியன் வருமானமும் இரண்டாவது ஆண்டில் ரூபா 499.95 மில்லியன் வருமானமும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் இறால்

விவசாயப் பண்ணைகளை அமுல்படுத்துவதன் மூலம் நேரடியாக 48 தொழில் வாய்ப்புக்களும் மறைமுகமாக சுமார் 90 தொழில் வாய்ப்புக்களும் உருவாகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு உவர் நீர் இறால் இனப்பெருக்கத்தினை அமுல்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தல்.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இறால் இனப்பெருக்க மத்திய நிலையம் 2010 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அரச – தனியார் பங்குடமை தொழில் முயற்சியின் கீழ் குத்தகை அடிப்படையில் முன்னெடுக்கப்படும் மத்திய நிலையமாகும். 2011 ஆம் ஆண்டில் இம் மத்திய நிலையம் அரச – தனியார் பங்குடமை தொழில்முயற்சியின் கீழ் King Aqua Services (Pvt) Ltd நிறுவனம் செயற்படுவதுடன் குத்தகைக் கால எல்லை முடிவடைந்தமையினால் இனப்பெருக்க மத்திய நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவதற்கு ஆர்வம் காண்பிக்கும் தரப்பினர்களிடமிருந்து பத்திரிகை விளம்பரத்தின் மூலம் ...அபிப்பிராயங்கள் கோரப்பட்டன. இதற்கு அமைய அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை செயற்பாடுகளின் பின்னர் 05 வருட காலத்திற்கு Taprobane Frozen Food (Pvt) Ltd இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் ஆண்டிற்கு SPF *L.* Vannamei உவர் நீர் இறால் சீனைகள் 97.2 உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கரையோர நீரியல் வாழ் செய்கையினை விருத்தி செயற்வதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகள்.

உவர் நீர் நீரியல் வாழ் செய்கை செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக அபிப்பிராய வெளிப்பாடுகளை கோருதல் (EOI)

- யாழ்ப்பாணம் மற்றும் களிநொச்சி மாவட்டங்களில் கடல் அட்டை ஏற்றுமதி கிராமத்தில் கொத்தனி முறைக்கு கடல் அட்டை பண்ணைகளை செயற்படுத்தல்.
- ஹம்பாந்தோட்டை, கல்முல்லை மற்றும் மட்டக்களப்பு, கொக்கடிச்சோலையில் நீரியல் வாழ் செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் நீரியல் வாழ் செய்கை.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் தர்மபுரம் பிரதேசத்தில் அமைந்துள்ள பல்விஷேட கடல் செட்டை மீன் இனப்பெருக்க மத்திய நிலையதினை அமுல்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தல்.

சமூர்த்தி அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்படும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

இரண்டு இலட்சம் சமூர்த்தி குடும்பங்களை கேந்திரமாகக் கொண்ட பூர்த்தியான மனைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் எமது அதிகார சபையினால் 2275 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் வேலைத்திட்டத்தின் கீழ் 2275 பயனாளிகளுக்காக செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக ரூபா 269.88 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டம்	ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை
01	சிறியளவு அலங்கார மீன் செய்கை	1326
02	அலங்கார மீன் செய்கையினை அபிவிருத்தி செய்தல்.	577
03	வாவிகளில் மீன் செய்கை	129
04	கடல் வாழ் செடி செய்கை	72
05	நீர் நிலைகளில் வலைக் கூடுகளில் மீன் செய்கை பண்ணைகளை உருவாக்குதல்.	9
06	சிறியளவு மீன் உணவு உற்பத்திக்கான அலகினைத் தாபித்தல்.	9
07	மீன் சினை உற்பத்தி அலகினை அபிவிருத்தி செய்தல்.	15
08	கூடுகளில் மோதா மீன் செய்கை	89
09	அலங்கார மீன் சந்தைகளை அபிவிருத்தி செய்தல்.	32
10	உப்பு / புகையூட்டப்பட்ட கறுவாடு உற்பத்தி	17
மொத்தம்		**2275**

நிலையான அபிவிருத்திற்கு ஒப்பீடாக செயற்படல்.

நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை பிரிவின் அபிவிருத்தியின் மூலம் நிலையான அபிவிருத்தி நோக்கம் 1, வறுமையற்று காணப்படல், நிலையான அபிவிருத்தி நோக்கு 2 பட்டினியை ஒழித்தல், நிலையான அபிவிருத்தி நோக்கு 12 - பொறுப்புடனான நுகர்வு மற்றும் உற்பத்தி, நிலையான அபிவிருத்தி நோக்கு 14 - நீரியல் வாழ் செய்கை உட்பட நிலையான பல அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு பங்களிப்பு செய்ய முடிவதுடன் அவை கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்காக பொறுப்பு வாய்ந்த அமைச்சின் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகளின் கீழ் நேரடியாக தொடர்புபடுகின்றது.

- நிலையான அபிவிருத்தி நோக்கு 1 வறுமையின்றி காணப்படல் - அதிகார சபையினால் வாழ் வாதார அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கைப் பிரிவில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் மற்றும் செய்கையாளர்களின் எண்ணிக்கை 91,020 வரை அதிகரித்துள்ளது.
- நிலையான அபிவிருத்தி நோக்கு 2 - பட்டினியை ஒழித்தல் - எமது இலக்காக அமைவது பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கினை விருத்தி செய்தல் மற்றும் நிலையான நீரியல் வாழ் செய்கையை ஊக்குவிக்கப்படுவதுடன் இதற்காக நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கையினை விருத்தி செய்வதற்காக அதிகாரசபையினால் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் அண்டில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி 104,450 மெற்றிக் டொன் என்பதுடன், அது 2020 ஆம் ஆண்டில் 102,220 மெற்றிக் தொன் உற்பத்திக்கு இணைவாக 2,230 மெற்றிக் தொன் அதிகரிப்பாகும்.

- நிலையான அபிவிருத்தி நோக்கு 12 – பொறுப்புடன் நுகர்வு மற்றும் உற்பத்தி – நீர் நிலைகளில் மீன் அறுவடையினை சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் இம் மீன் இனத்தை நீர் நிலைகளுக்கு அருகமையில் அல்லது கிராமத்திற்குள் விற்பனை செய்யப்படும். மிகை மீன் உற்பத்தியினை நகர சந்தைகளுக்கு சிறந்த முறையில் கிடைப்பதுடன் மேலும் இம் மிகை உற்பத்தி பிரதேச மட்டத்தில் கறுவாடு உலர்த்துவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. அனைத்து மீனவர்கள் மற்றும் செய்கையாளர்கள் அனுமதிப்பத்திரத்துடன் செயற்படுவதுடன் சிறந்த மீனவ முகாமைத்துவ ஒழுங்குகள் பின்னபற்றப்படுகின்றன. அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த சிறந்த முகாமைத்துவ ஒழுங்குகள் கோவைகளுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவ ஒழுங்குகளை அறிமுகப்படுத்தல், பொறுப்பு வாய்ந்த மீன்பிடி செயற்பாடுகளுக்கான உதவி ஒத்தாசையாகும். அத்துடன் அனைத்து புதிய நீரியல் வாழ் செய்கை செயற்திட்டங்கள் சூழலிற்கு பொருத்தமானவாறான பிரவேசத்துடன் பயன்படுத்தப்படுவதுடன் இது பொறுப்பு வாய்ந்த செய்கையினை உறுதிப்படுத்துவதுடன் இறுதியில் பொறுப்புடன் உற்பத்தி செயற்பாடுகள் உருவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

- நிலையான அபிவிருத்தி நோக்கும் 14 – நீரில் நீண்ட ஆயள் கொண்ட பயன்பாடுகள், சட்டவிரோதமான அல்லது சட்ட விரோமாக மீன் பீடித்தல், ஊழல் போன்றவைகள் காரணமாக உவர் நீர் மீன் அறுவடை நிலையானது என்பதனால் கரையோரத்தில் முன்னேற்றமடந்து வருவது சமுத்திர நீரியல் வாழ் செய்கையாகும். சமுத்திர நீரியல் வாழ் செய்கைக்காக சூழலுக்கு உகந்த பிரவேச செய்கையினை ஊக்குவித்தல் மற்றும் செய்கை முறைமைக்காக சூழலுக்கு உகந்த சதாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆழமற்ற கடல் பிரதேசங்களில் கடல் வாழ் செடி செய்கை ஊக்குவிக்கப்படுவதுடன் கடல் வாழ் கடல் நீரில் CO_2 உருஞ்சிக் கொள்கின்றது. இது கடல் நீரின் அமிலத்தன்மையினை குறைப்பதற்கு உதவியாக அமைகின்றது. சூழல் மற்றும் தொழில்நுடப் ரீதியில் நிலையான முறையில் தாங்கிக் கொள்ளக் கூடிய கொள்ளவினைக் கருத்திற் கொண்டு சமுத்திர செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் விரிவுபடுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பணிப்பாளர் சபையின் அறிக்கை

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை, கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட கணக்கு மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கையுடன் பணிப்பாளர் சபையினால் சமர்பிக்கப்படுகின்றது.

1. அறிமுகம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கீழ் காணப்பட்ட நீரியல் வாழ் செய்கைப் பிரிவு 1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் 1999 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (நெக்டா - NAQDA). NAQDA **இன் தலைமை அலுவலகம் இல**. 41/1, **புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ளது.**

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், இது பணிப்பாளர் சபையின் கீழ் நிறுவகிக்கப்படுகின்றது. அதிகார சபையின் பிரதானமாக பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நன்னீர் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி, கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி, பரவலாக்கல், நிதி மற்றும் மானிட வள அபிவிருத்தி ஆகிய ஐந்து பிரிவுகளினால் மற்றும் ஐந்து பணிப்பாளர்களின் வழிநடத்தலின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம் - (AQDCs)

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை மூலம் பிரதான நன்னீர் மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் (AQDC) –**பத்து** (10), நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் மூன்று (03), அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையங்கள் இரண்டு (02) மற்றும் பல் விஷேட கடல் வாழ் அட்டை இனப்பெருக்க மத்திய நிலையங்கள் கீழ் குறிப்பிட்டவாறு நடாத்தப்படுகின்றன.

மத்திய நிலையங்கள்	உற்பத்தி விஷேடங்கள்
உடவளவ (காப்)	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப்
தபுலை	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப் மற்றும் திலாபியா
இகிநியாகலை	பொதுவான காப்பயா, இந்தியன் காப், திலாபியா
கலாவெவ	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப் மற்றும் திலாபியா
நுவரெலிய	பொதுவான காப்பயா
உடவளவ (திலாபியா)	திலாபியா விஷேடம்
இரணமடு	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப் மற்றும் திலாபியா
முறுதுவெல	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப் மற்றும் திலாபியா
புதிய உடவளவ	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப்
பொலன்னறுவை	பொதுவான காப்பயா, இந்தியன் காப், சீன காப் மற்றும் திலாபியா
பம்பல	நன்னீர் இறால்
தில்லவடன (கந்தமோதர)	நன்னீர் இறால்
கல்லராவ	நன்னீர் இறால்
றம்பபொடகல்ல	அலங்கார மீன் இனப்பபெருக்கம் மற்றும் அபிவிருத்த உட்பட மேற்கூறப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
கிணிகத்ஹேன	அலங்கார மீன்
செவனபிடிய	அலங்கார மீன்
பல்விஷேட கடல் அட்டை இனப்பெருக்க நிலையம்	வரல மீன்
ஓலைத்துடுவாய்	கடல் அட்டைகள்

மேற்கூறப்பட்ட அனைத்து மத்திய நிலையங்களிலும் உதவிப் பணிப்பாளர் அல்லது நீரியல் வாழ் செய்கை ஆய்வாளர்கள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களாக செயற்படுவதுடன், அவர்களின் பொறுப்புக்களாக அமைவது நாடு பூராகவும் அமைந்துள்ள நீர் நிலைகளில் இடுவதற்காக தேவையான மீன் சினைகளை உற்பத்தி செய்வதாகும்.

கலாவெவ – தேசிய நன்னீர் மீனவ மற்றும் நீரியல் வாழ் செய்கை பயிற்சி நிறுவகம்

இந் நிறுவனம் நீரியல் வாழ் செய்கை அதிகார சபையின் பணியாளர் சபை, நன்னீர் மீனவர்கள், மீன் செய்கையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகத்தை அடிப்படையாகக் கெண்ட அமைப்புக்கள் மற்றும் ஆர்வம் காண்பிக்கும் தரப்பினர்களுக்காக நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை துறைக்கு உரிய பயிற்றுவிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் தரப்பினர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) இன் கீழ் நிருவகிக்கப்படுகின்றது.

நீரியல் வாழ் செய்கை பரவலாக்கள் சேவை

பிரதேச நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் அலுவலகம் மற்றும் மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கம் அலுவலகங்கள் 22 நாடெங்கும் செயற்படுகின்றன. (மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில்) பிரதேச/ மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர்கள் பரவலாக்கல் செயற்பாடுகள், ஒழுங்குக் கோவைகளை அமுல்படுத்தல், நீரியல் வாழ் முகாமைத்துவம் அதாவது நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை இடல், மீனவர்களை அறிவுறுத்தும் பணிகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தடுத்தலும், தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன

கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி

கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவின் கீழ் கரையோர நீரியல் வாழ் செய்கை மற்றும் மூன்று மேற்பார்வை அலகுகள், நன்னீர் இறால் இனப்பெருக்க மூன்று மத்திய நிலையங்கள் மற்றும் அலங்கார மீன் இனப்பொருக்க மத்திய நிலையம் உட்பட பயிற்சி மத்திய நிலையம் செயற்படுகின்றது. இச் சகல மத்திய நிலையங்களினதும் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கையில் கரையோர நீரியல் வாழ் செய்கை மற்றும் அலங்கார மீன் செய்கை அபிவிருத்தியினை மேற்கொள்வது இதன் பிரதான பொறுப்பாகும்.

நன்னீர் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி

நன்னீர் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பிரிவினால் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்படும் நன்னீர் நீரியல் வாழ் செய்கை மத்திய நிலைய பணிப்பாளர், உதவிப் பணிப்பாளாகள், நிலையப் பொறுப்பாளர் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன் மீன் சினை உற்பத்தி மற்றும் நீர் நிலைகள், வாவிகள், கூடுகளில் இடுவதற்காக செய்கையாளர்களுக்காக தொடர்ச்சியான மீன் சினை வழங்களை முன்னெடுப்பது அடிப்படைப் பொறுப்பாகும். இப் பிரிவினால் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்படும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்கள் 10 காணப்படுகின்றன.

2. நோக்கம்

நெக்டா நிறுவனத்தின் பிரதான நோக்கமாக அமைவது முறையான வழிகாட்டலின் மூலம் நீரியல் வாழ் செய்கையின் அபிவிருத்திக்குத் தேவையான கோவைகளை அமுல்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள், பயிற்சி மற்றும் பரவலாக்கல் செயற்பாடுகள் போன்ற முறைகளுடாக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கையின் நீடித்த, நிரந்த அபிவிருத்தியாகும். மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தல், ஏற்றுமதி சந்தைக்கு உயரிய பெறுமதி கொண்ட மீன்களை வழங்குதல் மற்றும் தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பத்தினை அதிகரிப்பதும், வருமான மட்டத்தினை மேம்படுத்துவதன் மூலம் வறுமையைக் குறைப்பதும் நெக்டா நிறுவனத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

15/09/2011 அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை 58(2) இற்கு அமைய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, ஊக்குவிப்பு நிறுவகம் (Promotional Institute) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

03. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் ஆளனி தொடர்பான தகவல்கள்

பிரிவு	அங்கீகரிக்கபபட்ட எண்ணிக்கை	தற்போதைய எண்ணிக்கை	வெற்றிட எண்ணிக்கை
பிரதன நிறைவேற்று உத்தியோகத்தா	**01**	**01**	**-**
சிரேஷ்ட முகாமையாளர்	**05**	**03**	**02**
நடத்தர மட்ட முகாமையாளர்கள	**28**	**26**	**02**
கனிஷ்ட மட்ட முகாமையாளர்கள்	**100**	**97**	**03**
நீரியல் வாழ் உயரின ஆய்வாளர்கள	69	69	-
பிரதேச / மாவட்ட உயிரியல் வாழ் செய்கை பரவலாக்கள் உத்தி.	20	20	-
புள்ளிவிபவில் உத்தியோகத்தர்கள	03	03	-
கணணிப் பகுப்பாய்வாளா	01	01	-
நிதி உத்தியோகத்தர்	01	01	-
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்	01	01	-
பெறுகை உத்தியோகத்தா	01	01	-
நிருவாக உத்தியோகத்தா	01	01	-
பணி மேற்பார்வை	01	-	01
விசாரணை உத்தியோகத்தா	01	-	01
மொழி பெயர்ப்பாளா	01	-	01
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்	**141**	**125**	**16**
நீரியல் வாழ் செய்கை உதிவியாளா	23	23	-
நீரியல் வாழ் செய்கை பரவலாக்கள் உத்தியோகத்தர்கள	110	98	12
முகாமைத்துவ உதவியாளா	03	-	03
தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	03	02	01
புத்தகம் பராமரிப்பு	01	01	-
பணி மேற்பார்வை	01	01	-
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத	**82**	**78**	**04**
ஆரம்ப மட்டம்	**436**	**390**	**46**
மின்சாரம் / இயந்திர தொழில்நுட்பம	11	09	02
சாரதி	54	52	02
இரசாயணகூட உதவியாளா	03	03	-
சுற்றுலா பங்களா உதவியாளா	08	03	05
சிறு உதவியாளர்கள்	360	323	37
மொத்தம்	**793**	**720**	**73**

அதேபோன்று, நீரியல் வாழ் செய்கை சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 109 பேர்களை உள்ளடக்கிய ஊழிய அணி பெறப்பட்டுள்ளது.

4. பிரதான பணிகள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பணியாக அமைவது நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் நன்னீர் மீன் பயன்பாட்டினை அதிகரிப்பதாகும். தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், நீரியல் வளம் சார்ந்த உற்பத்தி நிறுவன அளவினை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு இலங்கையின் நீரியல் வாழ் வளம் மற்றும் நீரியல் செய்கை கைத்தொழிலின் நீடித்த நிரந்தர அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொள்வதாகும்.

5. மூலதனம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 100% திறைசேரி மூலம் மூலதன முதலீடுகளை மேற்கொள்ளும் அரச நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மூலதனம் 90 மில்லியன் ரூபா ஆகும்.

6. வருமானம்

மீன் சினை விற்பனை மூலம் மத்திய நிலையத்தை குத்தகைக்கு விடுதல் மற்றும் ஏனைய வருமானங்களாக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 339.81 மில்லியன் ஆகும். 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை தீர்ப்பதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி அளவு ரூபா 493.07 மில்லியன் ஆகும்.

7. அதிகார சபையின் செயற்பாடுகள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்து ஆண்டிற்காக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை ரூபா 32.57 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

8. செயற்பாடுகள் தொடர்பான வெளிப்பாடுகள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதின்று அதிகார சபையின் ஐந்தொகை நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. மூலதன செலவினம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி சபைக்காக 2021 ஆம் ஆண்டு ரூபா 75.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இம் மொத்த ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது மத்திய நிலையங்களிலுள்ள கட்டடங்கள் மற்றும் வாவிகளை புனரமைப்பதற்கும், சுத்தப்படுத்துதல், நிலையான சொத்துக்களைக் கொள்வனவு

செய்தல், வாகனம் மற்றும் உபகரண புணரமைப்பு, மற்றும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுத்துவதற்காகும்.

மேலும் அதிகார சபைக்கு 2021 ஆம் ஆண்டிற்காக கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் ரூபா 1,555.85 மில்லியன் அந் நிதி மீன் இனப்பெருக்க மற்றும் உற்பத்தி கொள்ளவினை மேம்படுத்துவதற்கு, நீரியல் வாழ் செய்கை மத்திய நிலையத்தினை புணரமைப்பதற்கு மற்றும் பராமரிப்பதற்கு, அலங்கார மீன் கைத்தொழில் விருத்தி, இலவசமாக மீன் / இறால் குஞ்சுகளை இடல், மீன் இனப்பெருக்க நிலையத்தினை நிர்மாணித்தல் மற்றும் புணரமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாக நீரியல் வாழ் செய்கை விவசாய பண்ணை வலயத்தனை விருத்தி செய்தல், மீனவ சமூகத்தினை வலுவூட்டல், புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல் மற்றும் வாழ்வாதாரத்தினை விருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு உதவியின் கீழ் அதிகார சபைக்கு ரூபா 10.86 மில்லியன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ILO வேலைத்திட்டம் மற்றும் நீரியல் வாழ் செய்கை மற்றும் அபிவிருத்தியிற்காக சர்வதேச விவசாய ஆராய்ச்சியிற்கான அவுஸ்திரேலிய மத்திய நிலையம் (ACIAR) மூலம் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தியிற்காக வழங்கப்பட்டுள்ளது.

10. ஏனைய முகவர் நிறுவனங்களுடனான தொடர்புகள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை வள திணைக்களம், தேசிய நீரியல் வாழ் செய்கை வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவகம், வரையறுக்கப்பட்ட சீ – நோர் மன்றம், மாகாண சபை, இலங்கை மஹவெலி அதிகார சபை, கமநல அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, வன வள பாதுகாப்பு திணைக்களம், அரச சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் தனியார் துறையுடன் இணைந்து உவர் நீர் இறால் இனப்பெருக்க ஆய்வுகூடம், றகவ இறால் செய்கை விவசாயப் பண்ணை மற்றும் வாகரை இறால் விவசாய பண்ணை செயற்படுத்தப்பட்டன. தனியார் துறையுடன் இணைந்து உவர் நீர் இறால் செய்கை இனப்பெருக்க மத்திய நிலையம், மாதிரி இறால் செய்கை விவசாய பண்ணை, மோதா மீன் இனப்பெருக்க மத்திய நிலையம், நண்டு, கடல் அட்டை, கடல் வாழ் செடி செய்கையினை அமுல்படுத்தவதற்காக தேவையான தொழில் நுட்ப மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன.

11. நிறுவனத்தினால் எட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் தலையீடுகள்

2021 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்திற்காக நேரடி அல்லது மறைமுக தலையீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

12. கணக்காய்வாளர்

2021 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவது அரச கணக்காய்வாளர் திணைக்களத்தின் மூலமாகும்.



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



මගේ අංකය எனது இல. My No. } එන්එල්එස්/ඒ/නැක්ඩා/1/එන්/ඒ/2021/01 ඔබේ අංකය உமது இல. Your No. } දිනය திகதி Date } 2023 දෙසැම්බර් 06 දින

සභාපති

ශ්‍රී ලංකා ජාතික ජලජීවී වගා සංවර්ධන අධිකාරිය

ශ්‍රී ලංකා ජාතික ජලජීවී වගා සංවර්ධන අධිකාරියේ 2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව

---

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 තත්ත්වාගණනය කළ මතය

ශ්‍රී ලංකා ජාතික ජලජීවී වගා සංවර්ධන අධිකාරියේ 2021 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ ආදායම් ප්‍රකාශනය, හිමිකම් වෙනස්වීමේ ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ මූල්‍ය ප්‍රකාශන වලට අදාළ සටහන්, සාරාංශගත වැදගත් ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවලින් සමන්විත 2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ, 1998 අංක 53 දරන ශ්‍රී ලංකා ජාතික ජලජීවී වගා සංවර්ධන පනතේ සහ 1971 අංක 38 දරන මුදල් පනතේ විධිවිධාන ප්‍රකාරව මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව මාගේ වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුවේ සභාගත කරනු ලැබේ.

මාගේ වාර්තාවේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම කොටසේ විස්තර කර ඇති කරුණුවලින් වන බලපෑම හැර, අධිකාරියේ මූල්‍ය ප්‍රකාශන තුළින් 2021 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය ක්‍රියාකාරිත්වය හා මුදල් ප්‍රවාහ ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

පිටුව 1 | 15

1.2 තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම

(අ) ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිති 2හි 29 වගන්තිය ප්‍රකාරව සෘජු ක්‍රමයට මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සකස් කිරීමේදී සාමාන්‍ය ක්‍රියාකාරකම් වලින් ජනනය වූ අතිරික්තය සමඟ මෙහෙයුම් ක්‍රියාකාරකම් වල ශුද්ධ මුදල් ප්‍රවාහය සැසඳිය යුතු අතර එය මුදල් ප්‍රවාහයේ කොටසක් ලෙස හෝ මූල්‍ය ප්‍රකාශනවල සටහනක් වශයෙන් පෙන්විය යුතු වුවත් එම හෙළිදරව්ව සිදුකර නොතිබුණි.

(ආ) ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිති 7හි 47 වගන්තිය පරිදි දේපළ , පිරියත හා උපකරණ වල සාධාරණ වටිනාකම එහි ධාරණ අගයෙන් ප්‍රමාණාත්මක ලෙස වෙනස් වන විට, වසර 03 කට හෝ වසර 05 කට වරක් ප්‍රත්‍යාගණනය කළ යුතු වුවද, අධිකාරියේ ආරම්භක වර්ෂය වන 1998 වර්ෂයෙන් පසුව කිසිදු ස්ථාවර වත්කමක් ප්‍රත්‍යාගණනය කර නොතිබුණු බැවින් පිරිවැය රු.2,038,838,552ක දේපළ පිරියත උපකරණ හා පිරිවැය හා රු.992,461,882ක් වූ අභිජනනාගාර වත්කම් වල සාධාරණ අගය මූල්‍ය ප්‍රකාශන තුළින් නිරූපනය නොවන බව නිරීක්ෂණය විය.

(ඇ) ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිති 8හි 100 වගන්තිය පරිදි වාර්තාකරණ දිනට ඇති සෑම අසම්භාවය වගකීමක්ම හෙළිදරව් කළයුතු වුවත්, අධිකාරියට එරෙහිව කොන්ත්‍රාත්කරුවන් සහ අනිකුත් පාර්ශවයන් අධිකරණයේ ගොනුකර තිබුණු නඩු 11ක් සම්බන්ධයෙන් එලෙස හෙළිදරව් කර නොතිබුණි. තවද ප්‍රමිතියේ 105 වගන්තිය පරිදි වර්තාකරණ දිනට ඇති අසම්භාව්‍ය වත්කම්වල ස්වභාවයෙහි සංක්ෂිප්ත විස්තරයක් සහ ඒවායෙහි මූල්‍ය බලපෑමෙහි ඇස්තමේන්තුවක් හෙළිදරව් කළයුතු වුවත්, අධිකාරිය විසින් මත්ස්‍ය වගාව ප්‍රවර්ධනය සඳහා වගාකරුවන්ට ලබාදී මුදල් අය නොවීම සම්බන්ධයෙන් අධිකරණයේ පවරන ලද නඩු 229ක් සම්බන්ධයෙන් එලෙස මූල්‍ය ප්‍රකාශනවල හෙළිදරව් කර නොතිබුණි.

(ඈ) මහා භාණ්ඩාගාරයෙන් ප්‍රාග්ධන ප්‍රදාන ලෙස රු.31,973,196ක් ලැබී තිබුණද, ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිති 11හි 95 වගන්තිය ප්‍රකාරව ආදායමක් ලෙස ගිණුම් ගත කර නොතිබීම හේතුවෙන් එම ප්‍රමාණයෙන් ආදායම අඩුවෙන් දක්වා තිබුණි. මීට අමතරව ධීවර අමාත්‍යාංශයෙන් හා එක්සත් ජාතීන්ගේ සංවර්ධන වැඩසටහන, ජාත්‍යන්තර කෘෂි පර්යේෂණ සඳහා ඕස්ට්‍රේලියානු මධ්‍යස්ථානය, ජාත්‍යන්තර කම්කරු සංවිධානය යන ආයතන වලින් විදේශ ප්‍රදාන වශයෙන් ලද රු.1,555,854,461ක් සහ රු.10,864,808ක්, මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශනයේ ආදායම් ලෙස ඇතුළත්කර නොතිබුණි.

(ඉ) ඉඩම් කොමසාරිස් ජනරාල් දෙපාර්තුමේන්තුවෙන් බදු පදනමට ගෙන භාවිතා කරන අක්කරයක් පමණ වූ මන්නාරම ඔලෙයිතුඩාව මුහුදු කුඩැල්ලන් අභිජනනාගාරයේ ඉඩම රු.800,000ක වටිනාකමකට අවු.30 කාලයකට බදු ගෙන තිබුණ ද එම ඉඩම සම්බන්ධයෙන් ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිති 13හි 8 වගන්තිය ප්‍රකාරව ආයෝජන දේපළක් ලෙස ගිණුම්වල හඳුනාගෙන නොතිබුණි.

(ඊ) ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශ ගිණුම්කරණ ප්‍රමිති 20 හි 57(ඉ) වගන්තිය ප්‍රකාරව අස්පෘශ්‍ය වත්කම් මූල්‍ය ප්‍රකාශනවල වෙනම පෙන්විය යුතු වුවත් රු. 5,623,143ක පිරිවැයක් වූ පරිගණක මෘදුකාංගය දේපළ පිරියත උපකරණ යටතේ ගිණුම් කඩා තිබුණි.

(උ) අමාත්‍යාංශ ප්‍රදාන වලින් මිලදී ගෙන ගබඩාවේ පැවති රු.9,186,300 වටිනාකමැති ඡායා පිටපත් යන්ත්‍ර, අල්මාරි හා ටැබ් පරිගණක යන අයිතම ජ'නල් සටහන් මඟින් වත්කම් ගිණුම්වලට නැවත වරක් හර කිරීම නිසා ද්වි ගණනයක් සිදුවී තිබුණි.

(ඌ) කලා වැව මධ්‍යස්ථානයේ පැවති ලිපි ද්‍රව්‍ය, රසායනික හෝමෝන, දැල් අමුද්‍රව්‍ය, පොලිතින්, මාළු කෑම සහ ප්‍රධාන කාර්යාලයේ රසායනික හෝමෝන යනාදි රු.5,978,093 ක් වටිනා තොග මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමේදී අවසන් තොගයට ඇතුළත් කර නොතිබුණි.

(එ) සමාලෝචිත වර්ෂය අවසානයට කලාවැව මධ්‍යස්ථානයේ පැවති රු.3,744,591ක් වූ රසායනික හෝමෝන සහ මාළු කෑම, අවසන් තොග ශේෂයට ඇතුළත්වී නොතිබීමෙන් විකුණුම් පිරිවැය එම අගයෙන් වැඩිවී ලාභය අඩුවී තිබුණි.

(ඒ) 2021 දෙසැම්බර් 31 දිනට අංක 090 දරන ජ'නල් සටහන මඟින් ගබඩා තොග ලෙජරයට රු.13,649,343 ක් හර කර රදවා ගත් ඉපයීම් ගිණුමට බැර කර තිබුණු බැවින් තොග ශේෂය හා රදවාගත් ඉපයීම් එම වටිනාකමින් අධි ගණනය වී තිබුණු අතර එම ගැළපීම පිළිබඳ සතුටුදායක පැහැදිලි කිරීමක් ජ'නල් සටහනට ඇතුළත්ව නොතිබුණි.

